**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 194 /2024**
**U/s. 294(b), 353, 506(2) IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 2)**

| | |
|---|---|
| **Name** : விஜய் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2026** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். திரு. கே.டி. கார்த்திகேயன், தட்டச்சர்.**

**<u>C.C.No. 194/2024 23.03.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது கோட்டை மேடு, மேலஅலங்கம், கோட்டை மேடு பகுதியில் குடியிருந்து மீன் வியாராம் செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய பெண் தலைமை காவலர் 2376 திருமதி.மோகனசுந்தரி அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 07.04.2024 மாலை 4.30 மணியளவில் சுரேந்தர் என்பவர் குடித்துவிட்டு அவ்வழியாக செல்வோரை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அங்கு வந்த போலீசார் பொது இடத்தில் பொது இடத்தில் அசிங்கமாக திட்டக்கூடாது என்று சொன்னதற்கு பெரிய ஆளா என அருவருக்க வார்த்தைகளால் திட்டி அவரது கையால் போலீசாரை அடிக்க வந்தபோது அவர் நகர்ந்துகொண்டதாகவும், இப்ப நீ தப்பித்துவிட்டாய் என்கிட்ட ஆள் இல்லாத இடத்தில் மாட்டுவ அப்ப நான் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி சென்றதாகவும் போலீஸ் விசாரணையில் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்புக்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T.**கனிமொழி**., L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.